**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR**

Case No.CC.73/2021
Prosecution witness.01

| | |
|---|---|
| பெயர் : பிரேமலதா | ஜாதி : |
| தந்தை/கணவர் பெயர் : | தொழில் : |
| கிராமம் : | சமயம் : |
| தாலுகா : | வயது : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 27th day of November 2023.

27.11.2023

(எதிரி ஆஜர் இல்லை. எதிரி சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

சாட்சி ஆஜர். சாட்சி அசல் ஆதார் அடையாள அட்டையை சரிபார்த்தும் இவர் தான் சாட்சி சொல்லும் நபர் என்று நீதிமன்றம் போலிசார் சாட்சியை அடையாளம் செய்து உறுதி செய்த பின்பு சாட்சியம் அளிக்கிறார். (ஆதார் அடையாள அட்டை நகல் பெறப்பட்டது).

**குறிப்பு:** அரசு தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி மற்றும் வழக்கின் சூழ்நிலைகளை கருத்தில்கொண்டு நீதிமன்றத்தின் மூடிய அறையில் அரசு தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் மற்றும் எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆகியோர் முன்னிலையில் சாட்சி விசாரணை செய்யப்படுகிறார்.

**முதல் விசாரணை**

1) நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்கிறேன். இவ்வழக்கின் எதிரியை தெரியும். அவர் எனது உறவினர். கடந்த 14.02.2020 ம் தேதி மதியம் 01.00 மணியளவில் நான் வீட்டில் தனியாக இருந்தபோது கீழக்கன்னிசேரி கிராமத்தை சேர்ந்த எதிரி முனியசாமி எனது வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்து சேலையை பிடித்து இழுத்தார். தேவிடியா முண்டை என்னைவிட்டு ஏன் வந்த என்று கேட்டார். முதல்மாடி வீட்டில் வசித்து வந்த லெட்சுமி மற்றும் பக்கத்துவீட்டில் இருந்த பிரசில்லா ஆகியோர் சண்டையை விலக்கிவிட்டார்கள்.

2) நான் எதிரி முனியசாமியின் முகத்தில் மிளகாய் பொடியை தூவினேன். அருகில் இருந்த நபர்கள் எனது கணவர் டேவிட்பாலுக்கு விபரம் கூறினார்கள். எனது கணவர்

உடனே வீட்டிற்கு வந்துவிட்டார். எதிரியை கையோடு அழைத்துக்கொண்டு முதுகுளத்தூர் காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தோம். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். **(புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் குறுக்கு விசாரணை இல்லை என்றதன்பேரில் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

**DEPOSITION OF WITNESS**

**<u>IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, MUDUKULATHUR</u>**

Case No.CC.73/2021
Prosecution witness.02

| | |
|---|---|
| பெயர் : டேவிட்பால் | ஜாதி : |
| தந்தை/கணவர் பெயர் : | தொழில் : |
| கிராமம் : | சமயம் : |
| தாலுகா : | வயது : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 27th day of November 2023.

<u>27.11.2023</u>

(எதிரி ஆஜர் இல்லை. எதிரி சார்பில் கு.வி.மு.ச. பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

சாட்சி ஆஜர். சாட்சி அசல் ஆதார் அடையாள அட்டையை சரிபார்த்தும் இவர் தான் சாட்சி சொல்லும் நபர் என்று நீதிமன்றம் போலிசார் சாட்சியை அடையாளம் செய்து உறுதி செய்த பின்பு சாட்சியம் அளிக்கிறார். (ஆதார் அடையாள அட்டை நகல் பெறப்பட்டது).

**<u>முதல் விசாரணை</u>**

1) நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் நிலத்தரகர் வேலை செய்கிறேன். கடந்த 14.02.2020ம் தேதி நான் வேலை சம்மந்தமாக வெளியில் இருந்தபோது ஜான்சன், பிரவீன் மற்றும் எனது மனைவி அசா.1 பிரேமலதா ஆகியோர் போன் செய்து வீட்டில் பிரச்சனை உடனடியாக வீட்டிற்கு வா என்று கூறினார்கள். நான் வீட்டிற்கு வந்தபோது எனது வீட்டில் சுமார் 50 நபர்களுக்கு மேல் கூடியிருந்தார்கள். அப்போது எனது மனைவி அசா.1 என்னிடம் எதிரி முனியசாமி எனது மனைவியின் சேலையை பிடித்து இழுத்ததாக எனது மனைவி கூறினார்.

2) உடனே நான் காவல்நிலையத்திற்கு தகவல் கூறினேன். போலிசார் எனது வீட்டிற்கு வந்தார்கள். பின்பு எனது காரில் எதிரியை அழைத்துக்கொண்டு காவல்நிலையம் சென்று ஒப்படைத்துவிட்டு நானும், எனது மனைவி அசா.1ம் புகார் கொடுத்தோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் குறுக்கு விசாரணை இல்லை என்றதன்பேரில் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.